DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

| | | | |
|---|---|---|---|
| C.C.NO. 01 / 2014 | | Crime No.: | Station : |
| PW : 7 | LW : 8 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | மாதப்பன் | Caste | |
| Father's Name | சித்தபக்தர் | Calling | SSI(ஓய்வு) |
| Village | சத்தியமங்கலம் | Religion | |
| Taluk | | Age | 64 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 the day of | | | 08.01.2025 |

**(1 முதல் 3 எதிரிகள் ஆஜர்) (4, 5 எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை தொடர்ச்சி:-**

1. கடந்த 10.05.2013-ம் தேதி காலை 08.30 மணிக்கு எதிரிகள் வீட்டிற்கு செல்லும் வண்டித் தடத்தில் நின்றுகொண்டிருந்த எதிரிகள் சாமிநாதன், ஸ்ரீதேவி, சின்னராஜ் ஆகியோர்களை கைது செய்து காலை 09,30 மணிக்கு நிலையம் கொண்டு வந்து எதிரிகளை நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தினோம். 05.06.2013-ம் தேதி வழக்கில் காயம்பட்ட சாட்சி 1 லோகநாயகி, 2 பூர்ணிமா ஆகியோர்களுக்குக் காயச்சான்று வழங்கிய சத்தி அரசு மருத்துவமனை மருத்துவர் உமா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **சாட்சி 1 லோகநாயகி சாட்சி 2 பூர்ணிமா ஆகியோரின் காயச்சான்றுதலுடன் கூடிய விபத்து பதிவேடுகள் முறையே அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** தொடர் புலன் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. புகாரில் 12வது வரியில் "என்னையும், எனது தங்கை லோகநாயகி என்பவரையும்..." என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் மேற்படி புகாரானது லோகநாயகியால் கொடுக்கப்பட்டதல்ல என்றால் சரியல்ல. புகாரில் ஆயுதங்களைக் காட்டி மிரட்டியதாகக் குறிப்பிடவில்லை

என்றால் சரிதான். சம்பவமானது 09.05.2013 அன்று மதியம் சுமார் 03.00 மணிக்கு சம்பவம் நடந்ததாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் மருத்துவமனைக்கு 10.05.2013 அன்று அதிகாலை மருத்துவமனைக்குச் சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. சம்பவம் நடந்த இடத்திற்கும் அரசு மருத்துவமனைக்கும் இடையேயுள்ள தூரம் எவ்வளவு என்றால் 9 கி.மீ. புகார்தாரர் பொய்யாக புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் வந்தவர்களிடம் புகாரை நானே சொல்ல புகார்தாரர் எழுதி பொய்ப்புகாரைப் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. Medical memo கொடுக்கப்பட்ட பின்புதான் புகார்தாரர் மருத்துவமனைக்குச் சென்றுள்ளார் என்றால் சரிதான். புகார்தாரருக்கும், எதிரிகளுக்கும் சிவில் பிரச்சனை இருப்பதாக புகாரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார்தாரரின் தந்தை பொன்னுசாமிக்கும், எதிரி சாமிநாதனுக்கும் பொதுவாக பாத்தியப்பட்ட கிணற்றில் உள்ள மின் இணைப்பிலிருந்து பொன்னுசாமி தனது தனிப்பட்ட போர்வெல் மோட்டாருக்கு மின் இணைப்பை எடுத்ததால் இருவருக்கும் பிரச்சனை ஏற்பட்டதாக எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் ஆமாம்.

3. 03.05.2013–ம் தேதி பொன்னுசாமி என்பவர் இந்த எதிரி சாமிநாதனின் மீது புகார் கொடுத்து குற்ற எண்.109/2013 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் நான்தான் புலன் விசாரணை அதிகாரி என்றால் சரிதான். 03.05.2013–ம் தேதி எதிரி சாமிநாதன் என்பவர் பொன்னுசாமியின் மீது புகார் கொடுக்கப்பட்டு குற்ற எண்.110/2013 பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் வழக்குக் கோப்பைப் பார்த்தால்தான் தெரியும். 03.05.2013 அன்று குற்ற எண்.110/2013 வழக்கில் பொன்னுசாமி என்பவர் எதிரி சாமிநாதனைக் கல்லால் முன்நெற்றியில் அடித்ததால் மண்டை உடைந்து சாமிநாதன் கோவை அரசு மருத்துவமனையில் 10.05.2013 வரை சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்றால் வழக்குக் கோப்பைப் பார்த்தால்தான் தெரியும்.

4. எதிரியான சாமிநாதன் என்பவர் 10.05.2013 அன்று சிகிச்சை முடிந்து வீட்டிற்கு வரும்போதுதான் இந்த வழக்கில் அவரை கைது செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரி சாமிநாதன் என்பவரின் மகனான 4ம் எதிரி சுப்புராஜ் என்பவர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் 09.05.2013 அன்று அவரின் பேருந்து ஓட்டுநர் பணிக்கு சென்றுவிட்டார்

என்றால் சரியல்ல. பூர்ணிமா என்பவரின் விபத்துப் பதிவேட்டில் அவருக்கு காயங்கள் எதுவும் இல்லை என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் வெளிப்புறக் காயங்கள் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. 3ம் எதிரியான சின்ராஜ் என்பவரின் பெயரைப் புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு என்னால் சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் புகார்தாரர் பெண் என்பதால் அவர் கொடுத்த பொய்யான புகாரின் மீது எதிரியின் மீது தவறுதலாக குற்ற இறுதி அறிக்கைத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. சாட்சிகள் அனைவரும் புகார்தாரரின் உறவினர்கள் என்றால் சரிதான்.

6. நான் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும், காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கேற்றாற்போல் ஆவணங்கள் அனைத்தும் பின்னிட்டு தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், இந்த வழக்கின் சாட்சிகள் அனைவரும் காவல் நிலையத்தில் வைத்து வழக்கிற்கேற்றாற்போல் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை. சாட்சி முடித்துவைக்கப்பட்டது.